

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## 'தெய்வ அன்பினால்' பிறரை அன்புகூர்பவன் கிறிஸ்தவன்!

தேவன் நம்மை எவ்வாறு அன்புகூர்ந்தார்? நாம் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி **'தன் ஒரேபேறான குமாரனைத் தந்தருளி'** அன்புகூர்ந்தார் (யோவான் 3:16). இயேசு நம்மை எவ்வாறு அன்பு கூர்ந்தார்? நாம் பாவிகளாயிருக்கையில் **'கிறிஸ்து நமக்காக மரித்து'** தம் அன்பை விளங்கப்பண்ணினார்! (ரோமர் 5:8). இவ்வாறு தன்னையும், தன்னுடையவைகளையும் தியாகமாய் தந்த "தெய்வ அன்பை" நாம் நிஜமாகவே பெற்றிருந்தால் **"அந்த தெய்வ அன்பினாலே"** ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய, அல்லது 'தன்னலமற்ற' அந்த தெய்வ அன்பினால் பிறரிடத்தில் அன்புகூர உந்தப்பட்டிருப்போம்! (கலாத்தியர் 5:13,14). இவர்களே, கிறிஸ்தவர்கள்! மனுஷீக அன்புடையோர், சமூக சேவகர்கள்!

_tr

பெட்டகம் 23 | மார்ச் 2021 | பரல்கள் 03



## ‘வியாகுல நேரமே’ நாம் கெத்செமனே விரைந்து ஜெபிக்கும் நேரம்!

இயேசுவுக்கு மிகுந்த வியாகுலம் (AGONY) உண்டானபோதெல்லாம், கெத்செமனேக்கு “வழக்கமாய்” சென்றுவிடுவார் (லூக்.22:44). அவ்வாறாகவே, நாம் சந்திக்கும் உபத்திரவங்களும், துன்பங்களும் “நம்முடைய கெத்செமனேக்கே” நம்மை உந்தி நடத்திட வேண்டும்! கெத்செமனேயில் இயேசு தனியாக இல்லை.... தன் பிதாவோடு இருந்தார்! “பரம பிதாவை” தங்கள் வாழ்வின் சீரிய பங்காய் அறியாதவர்கள் யாவருமே, வியாகுல நேரங்களில் “துக்கத்தில் நித்திரை” செய்திடும் இருண்ட அனுபவமாய் பெற்றிருக்கின்றனர் (லூக்.22:45). ஆனால் நமக்கோ, அந்த துக்கத்திற்கு காரணமான சூழ்நிலைகள், நம்மை “எழுந்து” கெத்செமனேக்குச் சென்று ஜெபித்திடவே தூண்டுகிறது!! (வச.46). உண்மையான ஆறுதலும் இளைப்பாறுதலும் கெத்செமனேயில் காத்திருக்கும் அன்பரின் மார்பில் தான் இருக்கிறது!

இயேசு ஜெபம் பண்ணுகையில், அவருடைய “வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது” என காணும் அவரது ஜெபத்தின் காட்சி, நம் ஜெப வாஞ்சையை வலுப்படுத்துகிறது! (வச.44). *-Ed*

**2021 ‘பரலோக பொக்கிஷங்கள்’ – வருட சந்தா ரூ.150.00**

*அநேகர் சந்தாவை புதுப்பித்ததற்கு நன்றி! புதுப்பிக்காதவர்கள்* **மார்ச் 20-ம் தேதிக்குள்** *அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில்* **3** *பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.***125/-** *அயல்நாடு ஒரு பிரதி ரூ.***900/-** *அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள்* **‘புதிது’** *என்று குறிப்பிடவும். நன்றி!*

**ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!**
**சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!**

வங்கி கணக்கு: **MADURAI CHRISTIAN FELLOWSHIP,** Indian Bank - Koodal Nagar Branch
**A/c no: 502087685** Ifsc code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின். உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)

கடித தொடர்பு : **PARALOGA POKKISHANGAL**, 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.), Madurai - 625 018, S.India Cell : 9843049935 Ph: 0452 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## நிந்தை ஏற்று ‘சிலுவையில்’ சுயம் மரிப்பது, சிலாக்கியம்!

*மாம்சத்தின்படி நாம் ஒவ்வொருவரும்.... முழுவதுமாய் கறைபட்ட, சரி செய்யப்படக்கூடாத, உதவாக்கரைகள்! நன்மை செய்ய எவ்வளவு முயலுகின்றோமோ அவ்வளவு அதிகமாய் தோல்வியையே தழுவி நிற்போம். முழுக்க முழுக்க கறைப்பட்ட இந்த உதவாக்கரை மனிதனை வைத்துக் கொண்டு நாம் என்னதான் செய்வதோ? இவ்வாறு உணர்வுற்று அங்கலாய்த்து நிற்கும் இந்த வேளையில்தான்..... நாம் கிறிஸ்துவுடனே கூட சிலுவையிலறையப்பட்டோம் என்பதைக் காணும்படி தேவன் நம் கண்களைத் திறக்கிறார்!*

**ஆம், நம் “கடன் பத்திரம்” மாத்திரமல்ல, கடன்பட்ட அந்த கடனாளியே சிலுவையிலறையப்பட்டு விட்டான்! (கொலோ.2:14). கிறிஸ்து செய்து முடித்த கிரியைகளில் இவை அனைத்துமே அடங்கியிருக்கிறது. பிதாவானவர் அப்படியிருக்கும்படிச் செய்தார்..... அது அப்படியே ஆயிற்று.**

*ஆனால், இச்சிலாக்கியத்தை பெரும்பாலானோர் அனுபவிக்கவில்லையே! இவர்கள் பவுலைப் போல, “நான் கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டேன். இனி நான் பிழைத்திருப்பதில்லை” என உண்மையாகவே அறிக்கைசெய்யும் ஸ்தானத்தை அடைந்ததேயில்லை. ஒருவர் வெற்றி வாழ்க்கை வாழாமல் இவ்வசனத்தை அறிக்கை செய்யவே கூடாது. உதாரணமாக நான் மனம்புண்பட்டுவிட்டு அல்லது கோபமடைந்து விட்டு, “இனி பிழைத்திருப்பது நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” என அறிக்கை செய்வேனென்றால், “பாவம் செய்தது கிறிஸ்துவே!” என நான் கூறுவதாகப் பொருள்படும். இது கொஞ்சமும் ஏற்றுக்கொள்ள முடியாத பிதற்றல்! இவ்வுலகில் பூரணமான வெற்றி வாழ்க்கை வாழ்பவர்கள் யார் தெரியுமா? கேளுங்கள்! விசுவாசத்தினால்,* **கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட்டு** *“இனியும், தான் பிழைத்து” வாழாதவர்கள் எவர்களோ, அவர்கள்தான்!!*

*பிரியமுள்ள வாசகரே, நீங்கள் இந்த உன்னத ஸ்தானத்திற்குள்*

*பிரவேசித்து, தேவ கிருபையினால் நிலைத்து நிற்பதுதான் எத்தனை அருமையானது! அதிசயமான நமதாண்டவர் தம் மிகுந்த இரக்கத்தின்படி, நம்மையும் ஒரு பொருட்டாக எண்ணி, அவர் செய்து முடித்த இந்த உன்னத இடத்திற்கு அழைத்தாரே! அது அப்படியே நம்முடைய ஜீவியத்தில் நிறைவேறும்படி பலத்த கிரியையும் செய்கிறாரே, இது அற்புதம்!! (1தெச.5:23-24).*

*"நாம் இனி பாவத்திற்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று* **அறிந்திருக்கிறோம்**" *(ரோமர்.6:6). ஆம், ரோமாபுரி பரிசுத்தவான்களுக்கு "இந்த சத்தியத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்" என்றே பவுல் எழுதினார். இன்று யாருக்கு ஒருவர் அப்படி எழுத முடியும்? தன்னுடைய பழைய மனிதன் 'ஊர்ஜிதமாக' சிலுவையிலறையப்பட்டான் என அறிந்தவர்களுக்கே பவுல் அவ்வாறு எழுதினார். ஆ..... இந்த மெய் அறிவுக்குள் எப்படியாகிலும் அநேகர் வந்துவிட வேண்டும் என்பதே பவுலின் மற்றும் எந்த உத்தம பரிசுத்தவான்களின் இருதயத்தின் பாரமாயிருக்கிறது! கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோதே நம் பழைய மனிதனும் அவருடனே கூட சிலுவையிலறையப்பட்டான்!*

> **மனித அறிவின்படி, கல்வாரி சிலுவையில் அவரோடு வேறு யாருமே அறையப்படவில்லையே? பின் எப்படி நம் பழைய மனிதன் அவரோடு, அதே சிலுவையில், ஒரே சமயத்தில், அறையப்பட்டிருக்க முடியும்? கவனியுங்கள்: இயேசு நம்மைப் போலவே மனுஷகுமாரனாய் வந்து, நம் போன்ற மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவராய்.... நமக்குள் வாசம் செய்யும் "சுயசித்தத்தையும்" பெற்றிருந்தாரே, ஆ! அதுவே அந்த இரகசியம்!! இப்போதோ, இந்த சுயசித்தத்தை இயேசு ஆக்கினைக்குள்ளாய் தீர்த்து ஜெயித்துவிட்டார்.**

*எனவேதான், இந்த செயலை, நம்முடைய பழைய மனிதன் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட்டதாகவும், கிறிஸ்துவின் சரீரத்திற்குள் நாம் முழுமையாய் மரித்ததாகவும் பிதா அறிவிக்கிறார். இந்த செயலைக் காணும்படி திறக்கப்படும் கண்கள் பாக்கியமுள்ளது!*

*அப்படியானால், எல்லா ஜெயத்திற்கும், எல்லா மகிமைக்கும் திறவுகோலான 'சுவிசேஷத்தின் இரகசியத்தை' இப்போது நீங்கள் கண்டுகொண்டீர்கள்! கல்வாரியில் இயேசு செய்து முடித்ததான, நம் பழைய மனிதன் சிலுவையிலறையப்பட்ட செயல்,* **இப்போது நம் ஒவ்வொருவர் வாழ்விலும் நிஜமாய் மாறவேண்டும்.**

*"நம் பழைய மனிதன்" யார்? நாம் பாவம் என்று அறிந்து கொண்டவைகளுக்கு, நம் மனம் இசைந்து நின்று, பின்பு நம் சரீரம் அதை நிறைவேற்றும்படி ஆசையுடன் நிற்கும் அவனே, அந்த "பழைய மனிதன்!" இந்த பழைய மனிதனும் அவனுக்குரிய கிரியைகளும் சிலுவையிலறையப்பட்டு, களைந்து போடப்பட நிச்சயமாக முடியும்! (எபே.4:22; கொலோ.3:8).*

**"இந்த செயல் பாவமென்று" நாம் அறிந்து கொள்ளாததை சிலுவையிலறைந்து களைந்து போடுவது சாத்தியமாகாது! இருப்பினும், நம் பாவத்தைக் குறித்த வெளிச்சத்தை எப்போதெல்லாம் பெறுகிறோமோ, அப்போதெல்லாம் அவைகள் சிலுவையிலறையப்பட முடியும்.... அப்படி அறையப்பட்டே ஆக வேண்டும்!**

*"பாவம் செய்யும்படியாக" நம்மைத் தூண்டும் அனைத்துமே பழைய மனிதனிடமிருந்துதான் பிறக்கிறது! எனவே பழைய மனிதனை நாம் முற்றிலுமாக களைந்து போட்டு, இனி தொடர்ந்து "இது பாவமென" நமக்கு வெளிச்சம் கிடைத்த அனைத்து பாவத்தையும் நாம் ஜெயிக்கிறோம் என்பதே சிலுவை நமக்குத் தரும் வெற்றி!*

*ஆகவே, கிறிஸ்துவினிமித்தம் ஏற்படும் நிந்தை, இழிவாய் எண்ணப்படுதல் போன்ற துன்பங்களை நாம் மனமுவந்து ஏற்றிட வேண்டும் (கலா.6:12). "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும்....." என வாசிக்கிறோமே.... (1கொரி.1:23) 'கிறிஸ்து நமக்காக சிலுவையிலறையப்பட்டாரே' அதுவா இன்றைய கிறிஸ்தவ மார்க்கத்தாருக்கு இடறல்? இல்லை!* **"நாம் சிலுவையிலறையப்படுகிறோமே"** *அதுதான் இவர்களுக்கு இடறல்! ஏனென்றால், இங்குதான் நம் எல்லா சுயமும், அது எவ்வளவு அருமையாயிருந்தாலும் அல்லது எவ்வளவு லாபமாயிருந்தாலும், அவைகள் யாவும் கொஞ்சமும் இரக்கமில்லாமல் புறக்கணித்துத் தள்ளப்படுகிறது!* **அதன் சுயமரியாதைக்கோ அல்லது சுய–கௌரவத்திற்கோ கிஞ்சித்தும் இடமே இல்லை!!**

*ஆ, இங்குதான் இவர்கள் கோபம் கொள்ளுகிறார்கள். தங்கள் பார்வையில் இவர்கள் எவ்வளவு சுய-கௌரவ மதிப்பில் மிதந்து மகிழ்கிறார்களோ அவ்வளவு அதிகம் கோபக்கனலாகிறார்கள்! ஆனால் உண்மை என்ன தெரியுமா? 'நமக்கு அருமையான' இந்த எல்லா சுயமும் மரணத்திற்கே உரியது! அது கிறிஸ்து இயேசுவின் மூலமாய் சிலுவையில் அறையப்பட்டு விட்டது! இனி, 'சிலுவை எடுத்து' கிறிஸ்தவனாய் வாழ வேண்டிய பொறுப்பு நம்மையே சார்ந்ததாகும்!*

*– எலியாஸ் அஸ்லாக்ஸன்*

**ஆவியின் வரங்களைப் பெற்று உபயோகிப்பது, ராஜ கட்டளை!**

ரோமானிய சபை கிறிஸ்தவர்களுக்கு 'கிறிஸ்துவுக்குள் வாழும் முக்கியத்துவத்தை' **கிறிஸ்துவின் ஆவியை உடையவனாய் வாழ்ந்திடும்** உத்தமமென, பவுல் குறிப்பிட்டார். இதை வலியுறுத்தியே ரோமர் 8:9-ம் வசனத்தில் "கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல" என கூறினார்.

**அதாவது, ஒருவன் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்ற பின்பு, இயேசுவைப் போலவே வாழவேண்டும் என்ற பேரார்வம் அவனுக்கு இல்லையென்றால் அவன் ஒரு கிறிஸ்தவன் அல்ல! என்ற உண்மையை ஆணித்தரமாய் எடுத்துரைத்தார்.**

எனவே 'நான் பரிசுத்தாவி பெற்றுவிட்டேன்' என நீங்கள் மார்தட்டி கொள்வதில் பிரயோஜனம் இல்லை! உண்மைதான், நீங்கள் பெற்ற பரிசுத்தாவியின் அபிஷேகம் உங்களை வேறு பிரித்து காட்டும் அபிஷேகமாயிருக்கிறது!

பரிசுத்தாவியினால் நடத்தப்பட்டு ஒரு கிறிஸ்தவனாய்! தேவ குமாரனாய்! ஒளி வீசுவீர்களா? அல்லது, பரிசுத்தாவியானவர் உங்களைப் பார்த்து "நீ கிறிஸ்தவனல்ல" என கூறுவாரா? என்பதை தீர்க்கமான விடையாய் பரிசுத்தாவியானவர், ஒவ்வொரு கிறிஸ்தவனுக் குள்ளும் கொண்டு வர விரும்புகிறார். எல்லோரையும் போல் அபிஷேகம் பெற்றுக்கொண்டோம் என, போலி திருப்தி கொண்டவர்கள் யாவரும், ஒருநாளில் நிச்சயமாய் வேதனையடைவார்கள்.

ஆவியானவர் வழங்கும் இந்த ஜீவியத்திற்கு ஒப்பாகவே, தேவ ஆவியின் வல்லமையான கிரியைகளையும் பவுல் கூறினார். அன்றியும் சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனம் இல்லை என கூறினார் (1கொரி.12:1). மேலும் "ஞான வரங்களை (பரிசுத்தாவியின் வரங்களை) விரும்புங்கள்" எனவும் புத்தி கூறினார் (1கொரி.14:1).

ஒருவன் மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுத்து பரிசுத்தாவியின் அபிஷேகத்தையும் பெற்று, அதன் மூலம் ஆவியின் கனிகளாகிய திவ்விய சுபாவங்களை அவன் பெற்றுவிட்டால் போதும் என பவுல் எண்ணவில்லை. ஆனால், இன்றுள்ள அநேக கிறிஸ்தவர்கள் ஆவியின் வல்லமைக்கு தங்கள் விருப்பப்படி முற்றுப்புள்ளி வைக்கவே விரும்புகிறார்கள்.

**பவுலைப் போன்ற எந்த உத்தம தாசர்களும் பரிசுத்தாவியின் அளவில்லாத**

**வல்லமைக்கு ஒருபோதும் முற்றுப்புள்ளி வைக்கவே மாட்டார்கள். அதாவது, பரிசுத்தாவியின் ஜீவியம் இருந்தாலே போதும், வரங்கள் அப்படி ஒன்றும் பெரிதல்ல! என இவர்கள் வைத்திட துடிக்கும் முற்றுப்புள்ளி.**

*பரிசுத்தாவியில் நிறைந்த பவுல், அவ்வாறு செய்ய விரும்பாத படியால்,* **ஆவியானவரின் கிருபா வரங்களை** *1கொரிந்தியர் 12-14 அதிகாரங்களில் தொடர்ச்சியாய் விவரித்து எழுதினார். அதை பவுல் ஆணித்தரமாய் வலியுறுத்தி, பரிசுத்தாவி வரத்தின் பல்வேறு கிரியைகள், அது வழங்கும் வல்லமைகள், ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அருளப்பட்ட* **'பிறப்புரிமை'** *என்றே உறுதிபட கருதினார்! நாம் எல்லோரும், கிறிஸ்துவின் சரீரமான சபையில், தேவனுடைய ஆவியின் கிரியைகளுக்கு பயனுடையவர்களாய் மாற வேண்டிய பிரபல்ய கிறிஸ்தவர்கள்! என அவர் கூற வரவில்லை. ஏனெனில் பரிசுத்தாவியின் வரங்களை கிரியை செய்கிற அநேகர் தங்களை பிரபல்யப்படுத்தவே விரும்புகிறார்கள்.*

**கிறிஸ்துவினுடையவர்கள் 'பிரபல்யமாகி' சீரழிந்து போவதை தேவன் விரும்புவதில்லை..... மாறாக, வரங்களின் கிரியைகளை, தாழ்மையுள்ள பரிசுத்தவான்கள் பெற்று, அதை நிறைவேற்றி முடிப்பது அவர்களது பிறப்புரிமையேயாகும்.**

*இதை பவுல் குறிப்பிடும்போது தேவன் தன்னுடைய நோக்கத்தை பரிசுத்தாவியின் கிரியைகள் மூலமாய் நிறைவேற்றி முடிப்பதற்கு 'அற்ப ஜனங்களையே' தெரிந்து கொள்கிறார் என கொரிந்தியர்களுக்கு கடிந்துரைத்து போதித்தார். பரிசுத்தாவியின் கிரியைகளை 'தங்களுக்கென வளைத்துக் கொண்டு' உலக ஆவிக்கு மாற்றத் துடிக்கும் லௌகீக கிறிஸ்தவர்களைக் கண்டித்து "ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத்து தர்க்க சாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா? எப்படியெனில் ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்திய மானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்" என உரைத்தார் (1கொரி.1:20,27).*

*ஆகவே சகோதரர்களே, தேவனுடைய பரிசுத்தாவியும்.... 'ஆவியின் வரங்களும்' நம் சபையில், ஆவியில் நிறைந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் விரும்பி நாட வேண்டும் என்பது மாத்திரமல்ல, அது தேவ சமூகத்திலிருந்து புறப்பட்ட ராஜ கட்டளை! என, உறுதியாய் அறிந்து கொள்வோமாக!*

*– A.W. டோசர்*

## தேவனோடும் பரிசுத்தவான்களோடும் 'அழிவில்லா உறவு' வேண்டும்!

அந்த மாலை நேரத்தில் நாங்கள் தங்கியிருந்த ஸ்தலத்திற்கு திரும்பி வந்தவுடன், நான் உடனடியாக ஆலயத்திற்குச் சென்று ஜெபத்தில் தரித்திருந்தேன். இரவு உணவு நேரம் வரையிலும் ஜெபித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் கோச் வண்டியில் திரும்பி வந்து கொண்டிருந்த சமயத்தில், கர்த்தர் என்னோடும் எனக்குள் ளாகவும் வல்லமையாய் இடைப்பட்டு வந்தார். அனல் கொண்ட அவரது ஐக்கியத்தில் நான் இருந்ததை கோச் வண்டியிலிருந்த ஒருவரும் அறிந்திருக்க முடியாது. கோச் வண்டியின் கடின பயணத்தால் பாதிக்கப்படாமல், நான் வெளிப்படுத்திய **கர்த்தருக்குள்ளான சந்தோஷத்தால்** என்னோடு பயணித்த சகோதரிகள் யாவரும் அதிகமாய் உற்சாகமடைந்தார்கள். அதோடு சேர்த்து, என்னுடைய ஐசுவரியத்தி லிருந்தும்! மதிப்புடன் வாழ்ந்த கனத்திலிருந்தும்! உலகத்தின் பல்வேறு ஆசாபாசங்களிலிருந்தும்! நான் விடுதலையடைந்து, அவரது ஊழியத்திற்கு வந்துவிட்டதை எண்ணி, இனிய பாமாலை பாடல்களையும் பாடினேன். இவ்வாறு, பயணத்தில் நாங்கள் காக்கப்பட்டது, "இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும், பகலில் மேக ஸ்தம்பமாகவும்" கர்த்தர் காத்துக்கொண்ட அனுபவத்தைப் பெற்றோம்!

பயணத்தில் நடந்தது என்னவென்றால், ஓர் இருளான வன பகுதியில் "மிக ஆபத்தான இடம்" என்ற எச்சரிக்கை பலகையை நாங்கள் கண்டோம். அந்த ஸ்தலத்தை நாங்கள் கடந்தவுடன், கோச் வண்டியின் அச்சாணி முறிந்து விட்டது. சொற்ப நிமிடங்களுக்கு முன்பாகவே அந்த அபாய ஸ்தலத்தில் முறிந்திருந்தால், நாங்கள் அனைவருமே அழிந்திருக்கும் பரிதாபம் ஏற்பட்டிருக்கும்! என ஜனங்கள் கூறினார்கள். மெய்யாகவே, கர்த்தர் எங்களை காத்தார்!

மகதலேனா நினைவு நாளில் நாங்கள் 'அனசி' (Annecy) வந்து சேர்ந்தோம். ஜெனிவா பிஷப் அவர்கள் St.பிரான்சிஸ் - த - சலஸ் கல்லறை முன்பாக பரிசுத்த ஆராதனை நடத்தி, கர்த்தருடைய மேஜையில் பங்கு பெறச் செய்தார்கள். அந்த புனித நாளில், என் மீட்பரோடு நான் கொண்டிருந்த **'ஆவிக்குரிய திருமண உறவை'** நான் புதுப்பித்துக் கொண்டேன்! ஒவ்வொரு வருடமும் இதேபோன்ற புதுப்பித்தலை, மகதலேனா மரியாளின் நினைவு நாளில் நான் செய்வதுண்டு. மகதலேனா மரியாள் புனிதவதியின் நினைவுநாள், அப்படியொரு இன்பத்தை எனக்குத் தருவதுண்டு.

**அதுஏனென்றால், கர்த்தர் உயிர்த்தெழுந்த நாளில், *மகதலேனா மரியாளை* சந்தித்து அவளிடம் தனிப்பட்ட விதத்தில் காட்டிய அன்பின் உறவேயாகும்! அந்த உறவு, "தேவனுடைய அந்தராத்துமா" பரிசுத்தவான்களோடு வைத்து கொள்ள விரும்பும் அன்பின் உறவாகவே நான் கண்டேன்! இந்த உறவின் வளர்ச்சியை சார்ந்தே, நாம் அவருடைய சாயலாய் மாறுகிறோம்!**

*அவரோடு கொண்ட இந்த உறவு தேவனுக்கு பிரியமாய் இருக்கிறபடியால், நமக்கு சம்பவிக்க இருக்கும் சூழ்நிலையின் பல்வேறு மரண கண்ணியிலிருந்தும் நம்மை உயிர்ப்பிக்க வல்லமை கொண்டதா யிருக்கிறது. மேலும் நம்முடைய ஆத்துமாவில் 'அவருடைய மகிமையை' தங்கச் செய்வதாயிருக்கிறது. நம்மை விட்டு கடந்து சென்ற பரிசுத்தவான்கள் அனைவருக்கும் 'தேவன் தன்னுடைய இனிய உறவை' வழங்கி ஆசீர்வதித்திருப்பார் என்றே நான் நிச்சயத்திருந்தேன். இவ்வாறாக தேவனுடைய நட்புக்குள்ளான நண்பர்களாய் இணைந்து வாழும் பாக்கியம்* **'அழிவில்லாத உறவாய்'** *இருப்பதைக் கண்டு நான் பேரானந்தம் கொண்டேன்!*

*இதே நாளில், நான் அனசியை விட்டு* (Annecy) *ஜெனிவாவில் நடந்த ஜெபங்களில் கலந்து கொண்டேன். அங்கு நியமனம் செய்யப்பட்டிருந்த கர்த்தருடைய பந்தியில் நான் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அவ்வேளையில் அப்படி ஒரு சந்தோஷம் என் உள்ளத்தில் பிறந்தது. அந்நாளில், கர்த்தர் என்னை தம்முடைய வல்ல கரத்தால் என்னை தன்னோடு சேர்த்துக் கொண்டதாக உணர்ந்தேன்! அங்கு கூடியிருந்த, கத்தோலிக்கத்தில் மதிப்பும் அதிக மரியாதையும் நிறைந்த ஜனங்கள் யாவரும், என்னைப் போலவே கர்த்தரை தனிப்பட்ட விதத்தில் கண்டு கொள்ளும் பாக்கியத்தை அடைந்திட வேண்டுமென்று கர்த்தரிடம் ஜெபித்தேன்!*

*– மேடம் குயான்*

---

## 'கிறிஸ்துவே எனது ஆதாயமாய்' மாறிடும் விசுவாச வளர்ச்சி!

*கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும் மேன்மையை பிலிப்பியர் **3:9**-ம் வசனத்தில் பவுல் எழுதுகிறார். அதில் மிக முக்கியமான* **"கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய் வரும்** *தேவனால் உண்டாயிருக்கிற நீதியை நான் உடையவனாயிருக்க வேண்டும் எனவும்,* **கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று** *காணப்படும் படிக்கும்" தனது வாஞ்சையை வெளிப்படுத்தினார். இவ்வாறாக விசுவாசத்தின் மூலமாய் தேவனால் உண்டாயிருக்கிற நீதியை நாம் அடைவது, கிறிஸ்துவை ஆதாயம் செய்வதற்கு ஒப்பாகவே, பவுல் கருதினார்! இத்தனை பெரிய அழைப்பிலிருந்து நான் ஒருபோதும் பின்*

*வாங்காமல், கிறிஸ்துவுக்கு ஒப்பாய் மாறுவதற்கு* **இந்த விசுவாசத்தில்** *ஓங்கி வளர்ந்து வருகிறேன். அவருக்குள் வளர்ச்சி என நான் குறிப்பிடுவது நான் நிற்கும் நிலையை வைத்தே கூறுகிறேன்.*

**நாளுக்கு நாள் 'என்னுடைய ஸ்தானத்தை அல்லது என்னையே இழந்து' அவரை நான் பற்றிக் கொள்கிறேன். அவருக்குள் நான் காணப்படுவது சொல்லிமுடியாத ஆசீர்வாதம் என்பதை அறிந்திருக்கிறேன். இந்த உலகில் சம்பவிக்கும் ஒவ்வொரு 'எமர்ஜன்சியிலும்' (Emergency) அவரைப் பற்றும் விசுவாசம் எனக்கு போதுமானதாயிருக்கிறது! என்பதை நான் அனுபவமாய் அறிந்திருக்கிறேன்!**

*இன்னும் தெளிவாய் விளங்கிட, யோவான் 6-ம் அதிகாரத்தை சற்று சீர்தூக்கிப் பாருங்கள். இயேசு பிலிப்புவைப் பார்த்து "இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம்?" என்று கேட்டார் (வசனம் 5). அச்சமயம், பிலிப்பிற்கு முன்னால் இயேசு முன்வைத்த காட்சியைப் பாருங்கள். ஒன்றுமில்லாதிருந்தும்,* **இயேசு பெற்றிருந்த இளைப்பாறுதல்** *'அவருக்குள் நாம் காணப்படும்' சுதந்தரமாய் மாற வேண்டாமா? இதை அவர் வெறும் வார்த்தையாய் கூறாமல், அவ்வளவு ஜனங்கள் அவர்முன் அமர்ந்திருக்கும்போதே கூறினார்.*

*இங்குதான் ஆச்சரியமான ஒரு இரகசியத்தை இயேசுவுக்குள் காண்கிறோம்! அடுத்து 6-ம் வசனத்தில் "***தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தார்***" என்ற அவருடைய வார்த்தை என்னை இன்னமும் மெய்சிலிர்க்கச் செய்கிறது. எஜமான் என்ன செய்வார்? என்ற இடத்தை நாம் முற்றிலுமாய் அடைவது எத்தனை சிலாக்கியம்....அது தேவன் நம்மீது வைத்திருக்கும் பரிபூரண சித்தத்திற்குள் நாம் பிரவேசித்து தங்கும் ஸ்தலமாய் இருக்கிறது!*

*இவ்வாறு, நாம் விசுவாசத்தினால் கண்டடையும் நீதியை அவருக்குள் கண்டு, அவரை ஆசையாய் நான் தொடருகிறதுபோல, நாம் எல்லோரும் தொடர தேவன் கிருபை செய்வாராக!*

*உங்கள் வாழ்க்கையில் விளங்கமுடியாத சோதனைகளும் போராட்டங்களும் ஏற்படுகிறதோ? இச்சமயங்களில் நீங்கள் நிச்சயித்திருக்கவேண்டியது ஒன்றே ஒன்றுதான்! அது என்னவெனில்...*

***உங்கள் சூழ்நிலை என்னவாயிருக்கிறது என்பது ஒரு பொருட்டல்ல. மாறாக "நீங்கள் அவருக்குள் இருக்கிறீர்களா?" என்பதே காரியமாகும். புயலும் காற்றும் எத்தனை உக்கிரமாயிருந்தாலும் 'அவருக்குள் தன் ஸ்தானத்தை கண்டுபிடித்தவன்' பூரண இளைப்பாறுதலை கண்டடைந்திருப்பான்!***

*ஜனங்களைப் போஷிப்பதற்கு ஏராளமான பணம் இருந்தாலும் போதாதே என பிலிப்பு கூறினார். இச்சமயத்தில் அந்திரேயா கூறிய வார்த்தையை கவனியுங்கள். "இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு" என்ற தகவலை கூறினார் (வசனம்9). அந்த அப்பங்கள் சிறியதா அல்லது பெரியதா என்பதெல்லாம் கூறப்படவில்லை.*

*அதுபோலவே நம்முடைய வாழ்க்கையிலும் நம்முடைய ஊழியத்திலும் எவ்வளவு கொஞ்சம் இருக்கிறது என்ற அளவு இயேசுவுக்கு ஒரு பொருட்டல்ல. மாறாக "இயேசு அந்த அப்பங்களை எடுத்து" புழங்கினார் என்பதுதான், 11-ம் வசனம் கூறும் மேன்மை! மிகச்சிறியதை மிகப்பெரியதாய் மாற்றும் இயேசுவுக்குள் நாம் இருக்கும் விசுவாசமே, நாம் கண்ட நீதியாயிருக்கிறது.*

**இப்போது இயேசு அறிந்ததைப் போலவே, நாமும் அவரோடு சேர்ந்து "இயேசு செய்யப் போகிறதை நாங்களும் அறிந்திருக்கிறோம்" என அறிக்கை செய்யும் விசுவாசமே நம்முடைய வளர்ச்சி! (வசனம்.6).**

*இதை ஒரு நிகழ்ச்சியாய் வாசிக்காமல் கிறிஸ்து நமக்கு கற்றுத்தரும் தாற்பரியமாய் கண்டிட நம் மனக்கண்கள் பிரகாசிப்பதாக! எப்படியாகிலும் அவருக்குள் காணப்படுவது ஒன்றே நம் ஜீவியத்திற்கும், நம் ஊழியத்திற்கும், மற்ற எந்த தேவைகளுக்கும் போதுமான விசுவாச தாற்பரியமாயிருக்கிறது. இதை* Principle of Christ *என்றோ அல்லது* Gaining Christ *என்றோ நீங்கள் கூறலாம்!*

*அதாவது கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கும் தாற்பரியம் என்றோ! அல்லது கிறிஸ்துவை ஆதாயம் செய்தல் என்றோ! நீங்கள் அழைக்கலாம். இவ்வாறு 'விசுவாசத்தில்' அவருடைய நீதிக்குள் வளரும் பாக்கியம் நம் அனைவருக்கும் சொந்தமாய் மாற தேவன் அருள்புரிவாராக!*

*– ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## 'தனி ஜெபம் இல்லாதவன்' பரிசுத்தமாய் வாழ இயலாது!

*வேதாகம நாட்களிலோ அல்லது, திருச்சபை சரித்திரத்திலோ கர்த்தருடைய பிரகாசமான தேவ பக்தர்களின் வாழ்க்கை சரிதைகளை உற்று நோக்குங்கள். மோசே, தாவீது, தானியேல், பவுல் போன்ற கர்த்தருடைய தாசர்களைக்குறித்து எழுதியிருப்பதைப் பாருங்கள். மார்டின் லூத்தர், கிரன்மெர், ரிட்லி, பிராட்ஃபோர்ட் போன்ற திருச்சபை சீர்திருத்தவாதிகளைக் கவனியுங்கள்! ஒயிட்ஃபீல்ட், சிசில், வென், மச்செயின், பிக்கர் ஸ்டெட்ச், ஜான் வெஸ்லி..... போன்ற தேவ*

மக்களின் தியான வாழ்க்கைகளைக் கூர்ந்து நோக்குங்கள். இவர்கள் யாவரைப்பற்றியும் மிகவும் துலாம்பரமாகத் தப்பாமல் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு வார்த்தை என்னவெனில் "**அவர் ஒரு ஜெப மாந்தன்**" என்பதுதான்!

அநேக பின்மாற்றங்களுக்கான காரணம் யாது? தனி ஜெப வாழ்க்கையை அசட்டைபண்ணியதே பின்மாற்றமடைவதற்கான காரணங்களில் மிக பிரதானமாகும். பின்மாற்றக்காரன் தவறிவிழுந்த இடத்தைப்பற்றிய '**இரகசிய சரித்திரம்**' உண்மையில் கடைசிநாள் மட்டும் தெரியாது. கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அநேக மனித உள்ளங்களைச் சந்தித்தவனுமான எனது கருத்தின்படி பின்மாற்றம் எப்போதுமே தனி ஜெபவாழ்வை அசட்டைபண்ணுவதன் விளைவாகவே ஆரம்பமாகின்றது!

**ஜெபமின்றி வாசிக்கும் வேதவாசிப்பு, ஜெபமின்றி கேட்கும் பிரசங்கங்கள், ஜெபமின்றி ஒழுங்குசெய்துகொண்ட திருமணங்கள், ஜெபமின்றி மேற்கொண்ட பிரயாணங்கள், ஜெபமின்றி செய்து கொண்ட தோழமைகள்..... போன்றவை ஒரு மனிதன் பின்மாற்ற மடைவதற்கும், ஆவிக்குரிய வாழ்வில் பெரும் வீழ்ச்சியடைவதற்கும் அப்பட்டமான காரணங்களாகும்.**

மேற்கண்ட மனம்போன போக்குதான், தாமதித்துக் கொண்டிருக்கக்கூடிய லோத்துக்களையும், உறுதியற்ற சிம்சோன்களையும், மனைவியை விக்கிரமாக்கி வழிபட்ட சாலமோன்களையும், முரண்பாடான ஆசாக்களையும், எளிதில் எதற்கும் உலகத்தோடு ஒத்து வளைந்து கொடுக்கக்கூடிய யோசபாத்துக்களையும், அநேக உலக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிற மார்த்தாள் களையும் கிறிஸ்துவின் சபையில் உருவாக்கிக்கொடுத்தது..... ஆ, இது துயரம்!!

நண்பனே, நீ ஒரு உண்மையான கிறிஸ்தவனாயிருந்தால் நீ ஒரு போதும் ஒரு பின்மாற்றக்காரனாயிருக்கமாட்டாய் என்று நான் விசுவாசிக்கிறேன். நீ ஒரு பின்மாற்றக்காரனாக இருக்கக்கூடாது என்று நீ விரும்புவாயானால் நான் கேட்கின்ற "**நீ ஜெபிக்கின்றாயா?**" என்ற கேள்வியை எப்பொழுதும் நினைவுபடுத்திக்கொள்!

யாக்கோபு அப்போஸ்தலன் கூறுவது யாது? "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்" (யாக்கோபு 5:13). பரிசுத்த வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்ட பரிசுத்தவான்கள் அனைவரின் சரித்திரமும் இதுவேதான். யாக்கோபு தன் அண்ணனாகிய ஏசாவுக்குப் பயப்பட்ட நாளில் செய்தகாரியம் இதுதான்! இஸ்ரவேல் மக்கள்

*வனாந்திரத்தில் தன்னைக் கல்லெறிந்து கொல்ல எத்தனம் பண்ணு கையில் மோசே செய்ததும் இதுதான்! இஸ்ரவேல் புத்திரர் ஆயிக்கு முன்பாக முறிந்தோடி வெட்டுண்டு விழுந்தபோது யோசுவா செய்ததும் இதுவேதான்! கேலாவில் இடுக்கண்ணில் இருந்தபோது தாவீது செய்தகாரியமும் இதுவேதான்! சனகெரிப்பிடமிருந்து தனக்கு நிருபம் வந்து கிடைத்தபோது எசேக்கியா செய்ததும் இதுவேதான்! பேதுருவை ஏரோது பிடித்துச் சிறைச்சாலையில் போட்டபோது சபையார் செய்ததும், பிலிப்பிப் பட்டணத்துச் சிறைக்கூடத்தில் போடப்பட்டபோது பவுல் செய்ததும் இதேகாரியம்தான்!!*

*நம்முடைய சிலுவைகள் எத்தனை கடினமானதாய் இருந்தாலும் ஜெபமானது, அவற்றை நமக்காக இலகுவாக்கிக் கொடுக்கும். ஜெபமானது, நமது சிலுவையை 'நமக்காக சுமக்கும்' ஒருவரை நம்மண்டைக்கே அழைத்துக்கொண்டுவரும்! "வழி இதுவே இதிலே நடவுங்கள்" என்று சொல்லுபவரை ஜெபம் பரலோகிலிருந்து பூவுலகிற்கு கொண்டுவரும்!*

**பூவுலகின் நன்மையான வழிவாசல்கள் அனைத்தும் நிரந்தரமாக நமக்கு முன்னர் அடைபடினும், "தேவனை சந்திக்கும் தனி ஜெபம்" தனது நம்பிக்கையின் ஒளிக்கதிரை 'மூடிய கதவினூடே' பிரகாசிக்கச்செய்யும்!**

**ஜெபிக்காத நண்பனே,** *நான் உன்னை மிகவும் கருத்துடன் அதே சமயம் மிகக் கடுமையாக எச்சரிக்கின்றேன். நீ ஒரு ஆபத்தான நிலையில் இருக்கிறாய் என்று நான் உன்னை எச்சரிக்கின்றேன். நீ இந்த ஜெபியாத நிலையிலே மரிப்பாயானால், நீ ஒரு நஷ்டப்பட்ட ஆத்துமாதான்.... கர்த்தரைத் தேட மனமில்லாத உனக்கு மன்னிப்பு கிடையாது என்பதை மறந்துவிடாதே!*

*கர்த்தரிடம் ஜெபிக்கவும், அவரிடம் எதையாவது கேட்பதற்கும், எனக்கு எவ்வித அவசியமுமில்லை என்று சொல்லுவதற்கு நீ யார்? மரணத்தோடும், நரகத்தோடும் நீ சமாதான உடன்படிக்கை பண்ணிக்கொண்டாயோ? நரகத்தின் அவியாத அக்கினியோடும் அங்குள்ள புழுக்களோடும் நீ ஒப்புரவாகி விட்டாயோ? உன் வாழ்க்கையில் கர்த்தர் உனக்கு 'மன்னிக்கவேண்டிய பாவங்கள்' ஒன்றும் உன்னிடமில்லையோ? நரகத்தின் நித்திய அழுந்துதலைக் குறித்து உனக்கு பயம் இல்லையோ? மோட்ச மகிமைகளை அனுபவிக்க வேண்டுமென்ற தாகம் உனக்கில்லையோ? இனியாவது நீ விழித்தெழும்பக் கர்த்தர் உனக்கு உதவி செய்வாராக!*

*– J.C. ரைல்*

## "கிறிஸ்துவின் ஐக்கியமே" தேவ பக்தியின் இரகசியம்!

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன; தேவனுடைய பரிசுத்த மனுஷர் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (2தீமோ.3:16, 2பேதுரு1:21). தேவனே பற்பல காலங்களிலிருந்த பல மனுஷரைக் கொண்டு வேதாகமத்தை எழுதும்படிச் செய்தவர். இதுவே வேதாகமத்தின் ஆச்சரியமான ஒற்றுமைக்குக் காரணம். **வேதாகமத்தின் மொத்தப் பொருள் கிறிஸ்து!** வேதத்தையும் கிறிஸ்துவையும் பிரிக்க முடியாது. பிரித்தால், வேதாகமம் விளங்காத புஸ்தகமாகிவிடும்! ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் வரை நிறைந்திருப்பவர் கிறிஸ்துவே. "புஸ்தகச் சுருளில் **என்னைக் குறித்து** எழுதியிருக்கிறதென்றும், வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; **என்னைக் குறித்துச்** சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே" என்றும் ஆண்டவர்தாமே சொன்னார். பழைய ஏற்பாடு மறைக்கப்பட்ட புதிய ஏற்பாடு, புதிய ஏற்பாடு வெளியாக்கப்பட்ட பழைய ஏற்பாடு! ஆகையால் வேதாகமத்தை அவமதித்து கிறிஸ்துவைக் கனம் பண்ணலாம், என நினைப்பது பொய்! கிறிஸ்துவை அவமதித்து வேதாகமத்தை மேன்மைப்படுத்தலாம் என்று எண்ணுவதும் பொய்! இரண்டும், உயிரும் உடலும்போல் இணைக்கப்பட்டிருக்கின்றன.

**தற்காலக் கொள்கைக்காரரின் சாதுரிய ஞானம் சபைகளுக்கு நாசம்! இந்த விஷம் எங்கும் பரவி அநேகர் ஆதிவிசுவாசத்தை இழந்து தடுமாறுகிறார்கள். பூர்வ விசுவாசம் தழைத்தாலொழிய பூர்வ ஆசீர்வாதம் வரப்போகிறதில்லை!**

தேவ வசனமும் ஜெபமும் கிறிஸ்தவ ஜீவியத்தின் இரண்டு பிரதான தூண்களாகும். ஜெபத்துக்கு உயிர் கொடுப்பது தேவ வசனம். தேவ வசனத்தின் அதிசயங்களை வெளிப்படுத்துவது ஜெபம். வேதத்தைச் சந்தேகிக்கும்போது ஜெப வாசல் அடைபடும். தேவ ஊழியமும் வியர்த்தமாகும். ஆதிமுதல், காலத்துக்குக் காலம் சபைகளில் உண்டான ஆவிக்குரிய எழுப்புதல்களுக்குக் காரணம் **தேவவசனமும், ஜெபமுமே!** ஆயிரமாயிரமான ஏழைப்பாவிகள், கேட்டின் பாதையை விட்டுத் திரும்பி, கிறிஸ்துவின் மூலமாய் ஜீவனையும் சமாதானத்தையும் கண்டடைந்தார்கள். திருச்சபையில் பெரிய காரியங்களைச் செய்து, திரளான ஆத்துமாக்களுக்கு ஆசீர்வாதமாயிருந்தவர்கள் எல்லாரும், தேவ வசனத்தையும் கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் பூரணமாய் நம்பி ஏற்றுக்கொண்டவர்களே! இங்கிலாந்து தேசத்தில் பிரசித்திப்பெற்ற பிரசங்கிகளாகிய வெஸ்லி, ஸ்பர்ஜன் முதலான

வர்களானாலும், அமெரிக்கா தேசத்தில் எழும்பின பிரபலமான பிரசங்கிகளானாலும், தற்காலத்துக்கொள்கையை அனுசரித்திருப்பார்களானால் ஒரு ஆத்துமாவையாகிலும் ஜீவ வழிக்கு நடத்தியிருக்க மாட்டார்கள்! கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி வந்த பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவை அவமதிக்கிறவர்களுக்குள் வசிக்க மாட்டார்.

**தற்காலக் கொள்கைக்காரர் அறிவிற் சிறந்தவர்களாயினும், பரிசுத்த ஆவியின் வல்லமையின்றி, அவர்கள் அறிவுமாத்திரம் பாவிகளை இரட்சிக்காது!**

தேவன் மாம்சத்தில் வந்ததே, கிறிஸ்துமார்க்கத்தின் விசேஷம். ஒருவரும் கிட்டிச்சேரக்கூடாத ஒளியில் வசிக்கும் கடவுளைக் கண்டது யார்? அவருடைய தன்மை என்ன? குணமென்ன? அவரோடு ஐக்கியப்பட யாரால் கூடும்?

*அளவிலடங்காத வல்லமையும் மகிமையும் நிறைந்த தேவனோடு உறவாடிச் சிநேகமாயிருப்பது எப்படி?* **இதோ, ஒரு மனுஷன்!** *சாந்தமும் மனத்தாழ்மையுமுள்ளவர்! இரக்கமும் காருண்யமும் நிறைந்தவர்! கிருபையும் சத்தியமும் பொருந்தியவர்! அன்புக்கும் சிநேகத்துக்கும் ஏற்ற தயாளன்! எவரையும் புறக்கணியாது ஏற்றுக்கொள்ளும் நேசன்! அவரோடு தாராளமாகப் பேசலாம்! அவர் மார்பில் சாய்ந்துகொள்ளலாம்! அவருடைய கையைப் பிடித்து உலாவலாம்! நம் மனதில் உள்ள யாவையும் அவருக்குச் சொல்லலாம்! நமக்குத் தேவையானதை அவரிடம் கேட்கலாம்! அவர் யார்? அவர் மனுஷன் மாத்திரமோ? அவர் சற்குரு மாத்திரமோ?* **அவர் மாம்சத்தில் வந்த கடவுள்!** *நாம் அன்பான மனுஷனென்று உறவாடின அவரே தேவன்! இதுவே கிறிஸ்து மார்க்கத்தின் மாட்சிமை! மனுஷர் தம்மோடு ஐக்கியமாகி உறவாடும்படி, மகத்துவம் பொருந்திய நித்தியதேவன் தமது குமாரன் மூலமாகச் செய்த கிருபையின் உபாயமிது..... இதுவே கிறிஸ்துமார்க்கம்! இதுவே வேத வெளிப்படுத்தல்! இதுவே ஆவியானவரின் போதனை! இதுவே திருச்சபையின் அஸ்திபாரம்! இதுவே மனுக்குலத்தை இழுத்துக்கொள்ளும் தேவகாந்தம்! இதுவே உத்தம விசுவாசிகளின் அனுபவம்!*

கிறிஸ்து ஒரு மனுஷனாக மாத்திரம் இருந்தால் நமது தேசத்திலிருந்த ஏதோ ஒரு சிறந்த ஞானியை நாம் குருவாகப் பிடித்து நிற்கலாமே. அறிவிற் சிறந்த பக்தர்களும் ஞானிகளும் நம் தேசத்தில் உண்டே. அவர்கள் கடவுளைத் தேடி உள்ளம் உருகிப்பாடின அரிய

பாடல்களும் உபதேசங்களும் நமது கையில் இருக்கிறதல்லவோ? அவர்களைவிட்டு அந்நிய தேசமாகிய பாலஸ்தீனாவில் இருந்த ஒரு யூதகுருவை நாம் பின்பற்ற வேண்டியதென்ன? உலகம் முழுவதும் அவரை நாடித்தேடி அவர் திருவடி பணிவதற்குக் காரணந்தான் என்ன?

**கிறிஸ்துவின் தெய்வீகம் சொல்லிக்கொடுப்பதினால் மாத்திரம் அறியக் கூடியதல்ல. நாம் அவரைப் பூரணமாய் ஏற்றுக்கொண்டு, அவரில் அன்புகூர்ந்து, அவர் திருவுபதேசத்துக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அவருடைய தெய்வீகத்தை நமக்குள் வெளிப்படுத்து கிறார். பரிசுத்த ஆவியினாலேயன்றி நாசரேத்தூர் இயேசுவை கர்த்தரென்றும் நாம் அறிந்துகொள்ள முடியாது.!**

அவருடைய தெய்வீக மகிமையை நமது அனுபவத்தில் கண்டபின் அவரைவிட்டு விலகவும் முடியாது. அவர் நம்மைத் தமது அன்பால் ஆண்டுகொள்ளுகிறார். நாமும் அவரை முழுவதுமாய் பற்றிக்கொள்ளுகிறோம்! கிறிஸ்துவின் மகிமையை அறிந்த விசுவாசிகள் எல்லாவற்றிற்கும்மேலாக அவரையே தங்களுக்குப் பொக்கிஷமாக்கிக் கொள்ளுகிறார்கள். அவரே நிமிஷந்தோறும் அவர்களுக்குள் ஜீவனாக விளங்குகிறார்! அவர்கள் எண்ணம், நோக்கம், எழுத்து, பேச்சு, முயற்சிகள் யாவும் கிறிஸ்துவே. 'எனக்கு எல்லாம் இயேசுவே' என்று விசுவாசி பாடுகிறான். பரலோகத்தில் அவரை யல்லாமல் அவனுக்கு யாருண்டு? பூலோகத்தில் அவரைத்தவிர அவனுக்கு வேறே விருப்பமில்லை! **இவ்வாறு கிறிஸ்துவும் விசுவாசியும் இணைக்கப்படுவதே கிறிஸ்து மார்க்கம்.** அவ்வாறான உயிருள்ள ஐக்கியத்தை, பிரிக்க முடியாத தெய்வ உறவை உண்டு பண்ணுவதையே எந்த தேவ ஊழியனும் செய்வான்! அவன் பணியாற்றும் கிறிஸ்துவின் சபையும் நிறைவேற்றும்!

– பரமானந்தம் ஐயர்

---

## "குற்றஞ்சாட்டுதலை கேட்க மறுப்பது" அன்பின் இலக்கணம்!

**அ**ன்பையும் நட்பையும் பாதுகாத்துக் கொள்வதற்கு, சாக்ரடீஸ் ஞானி கடைப்பிடித்த "அவதூறு கேட்க மறுக்கும்" அவரது பண்பு, நம் யாவருக்கும் நல்லதொரு மாதிரியாய் விளங்குகிறது! ஒருநாள், சாக்ரடீசுக்கு அறிமுகமான ஒருவர், சாக்ரடீசை சந்தித்து "சாக்ரடீஸ், உன்னுடைய நெருங்கிய நண்பன் புளூட்டோவைக் குறித்து **'சேதி' ஒன்று** கேட்டேன்?" எனக் கூறியபோது .....

"சற்று பொறுங்கள்!" எனக் கூறிய சாக்ரடீஸ், "என் நண்பனைக் குறித்து நீங்கள் யாதொன்று சொல்வதற்கு முன்பாக **மூன்று வடிகட்டி**

**சோதனை** உங்களிடம் வைத்திட விரும்புகிறேன்'' எனக் கூறினார். அதற்கு அந்த சகோதரன் ''என்ன, மூன்று வடிகட்டி சோதனையா?'' என வியந்து கேட்டார்! 'ஆம்' என பதிலுரைத்த சாக்ரடீஸ் ''என் நண்பனைக் குறித்து நீங்கள் கூறிடும் 'சேதி' இந்த 'மூன்று வடிகட்டி சோதனையில்' கடந்து வருவது **என் சுத்த மனசாட்சிக்கு** நல்லதாகவே நான் கருதுகிறேன்:

ஆகவே, **வடிகட்டியின் முதல் சோதனை 'உண்மை' (Truth)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறும் சேதி முற்றிலும் உண்மையானதுதானா? எனக் கேட்டார். ''ம்.... அப்படிச் சொல்ல இயலாது! ஏனெனில் 'இந்த சேதியை' எனக்கு வேறொருவர்தான் கூறினார்....'' எனக்கூற, உடனே சாக்ரடீஸ், ''புரிந்து விட்டது.... நீங்கள் சொல்லப்போகும் சேதி உண்மையா? இல்லையா? என உங்களுக்கே தெரியவில்லை!'' எனக் கூறினார்.

''சரி போகட்டும்.... **வடிகட்டியின் இரண்டாவது சோதனை 'நன்மை' (Goodness)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறும் சேதி நன்மையான சேதியா?'' எனக் கேட்டார். ''ம்..... அப்படிச் சொல்ல இயலாது, கொஞ்சம் நன்மைக்கு புறம்பானதுதான்....'' எனக்கூற, உடனே சாக்ரடீஸ் ''புரிந்து விட்டது..... நீங்கள் சொல்லப் போகும் சேதி, என் நண்பனைப் பற்றிய **தீமையான சேதிதான்!** அதுவும் கூட, அது உண்மையானதா? என்பதும் உங்களுக்கு தெரியாது'' எனக் கூறினார்.

தொடர்ந்து சாக்ரடீஸ் ''சரிபோகட்டும்..... எனது கடைசி **வடிகட்டியின் மூன்றாவது சோதனை 'பயனுள்ளது' (Usefulness)** என்பதே ஆகும். என் நண்பனைப் பற்றி நீங்கள் கூறப்போகும் சேதி, எனக்கு எவ்விதத்திலும் பயனுள்ளதாய் இருக்குமா?'' எனக் கேட்டார்! அவர் சிரித்துக் கொண்டே ''அப்படியும் சொல்ல இயலாது....'' என்று கூறவே.....

சாக்ரடீஸ் தனது முடிவுரைக்கு வந்து விட்டார், ''அன்பானவரே நீங்கள் சொல்ல வந்த சேதி உண்மையானதாகவும் தெரியவில்லை! நன்மையானதாகவும் தெரியவில்லை! குறைந்தது பயனுள்ளதாய் இருக்கிறதா ..... அதுவும் இல்லை! பின் ஏன் எனக்கு அன்பாயிருக்கும் நண்பனைக் குறித்த 'அவதூறான' சேதியை சொல்ல வேண்டும்?'' என முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். இவ்வித உத்தம குணம் கொண்ட சாக்ரடீஸிடம், அவரது நண்பனாகிய புளூட்டோவை பற்றி அநேகர் கூறவந்த அவதூறை, ''அந்த அவதூறு என்ன சேதி?'' என சாக்ரடீஸ் கடைசி வரை கேட்கவே இல்லை!

– சாக்ரடீஸ் பெட்டகம்

## 'தாழ்மையை' பிறர் மீது துஷ்பிரயோகம் செய்வது தீது!

*'தாழ' குதியுங்கள்! அப்போது தூதன் உங்களைத் தாங்குவார்! என்ற குரல், வசனத்திற்கு ஒப்பான தூதனின் குரல்போலயிருந்தாலும், அது சாத்தானின் குரல்! (லூக்கா 4:9-11). சுயாதீனமாய்* **'தன்னைத் தானே தாழ்த்தும்'** *கௌரவமே தேவன் நமக்கு அளித்துள்ளார்! உங்களின் சுயாதீனமான தாழ்மையை யாரும் பறித்து, உங்களை 'தாழ்வு மனப்பான்மைக்குள்' தள்ளி விடாதிருக்க கவனம் கொள்ளுங்கள்!*

*உலக மாந்தர்களை* **"தாழ்வு மனப்பான்மை"** *குழிக்குள் தள்ளி, பல்லாயிரம் மக்களை 'மன நோயாளியாய்' மாற்றியுள்ளான் இந்த கொடிய இருளின் அதிபதி. இன்னும் அதிகமாய், எண்ணற்ற மக்களை* **'தற்கொலை'** *செய்திட வைத்துவிட்டான், இந்த கயவன் பிசாசு! இன்னும் ஒருபடி அதிகமாய், சபையிலுள்ள 'மாசற்ற வாழ்க்கை' வாழத் துடிக்கும் இயேசுவின் சீஷர்களை, அவரின் பக்தர்களை "நீ இப்படி 'தாழ' குதித்து விட்டால், பரத்திலிருந்து உதவிக்கரம் 'கிருபை' என்ற பெயரில் வெளிப்பட்டு, உன்னை உயர்த்திவிடும்!" என, பொய் கிருபை காண்பித்து, உங்களை மடங்கடிக்கும் குரலை 'பகுத்தறிந்து' அதை உதறித் தள்ளுங்கள்!!*

> *யோபுவிற்கு 'எலிப்பாஸ்'* என்ற ஒரு உடன் நண்பன் இருந்தான்! யோபுவிற்கு துன்பம் வந்தபோது, அவனோ தன் நட்பின் உத்தமத்தை காத்துக் கொள்ளாமல் "யோபுவே, நீ பிறரால் 'தாழ' தள்ளப்படும் இந்த வேளையில், 'கர்த்தர் என்னை உயர்த்துவார்' என தாழ்மையாய் பணிந்து விடு" என கூறினான். அதுமாத்திரமல்ல, இன்று நாம் அறிந்துள்ள 'தாழ்மையுள்ளவர்களுக்கு தேவன் கிருபையைத் தருகிறார்' என்ற புதிய ஏற்பாட்டின் முக்கிய செய்தியை *யோபுவிற்கு* கூறி, அவனை தடுமாறச் செய்துவிட்டான்! (யோபு 22:29).

*இச்சமயத்தில் அவனிடம் திரும்பிய யோபு "பார் எலிப்பாஸ், நானாக முன்சென்ற வேளையில் 'தேவன் அங்கு இல்லை' என்பதை கண்டேன்! நீ கூறும் 'தாழ' வந்து பின்னால் வந்தேன், அங்கேயும் அவர் இல்லையே!" இப்போது காரியம் எனக்கு தெளிவாகி விட்டது: அது என்னவென்றால்,* **இந்த கொடிதான சூழ்நிலையில்** *'நான் அவரை பார்க்கா விட்டாலும்' என் இடப் பக்கத்தில் அவர் கிரியை செய்வதையும், என் வலப்பக்கத்தில் கிரியை செய்வதையும் அறிந்தேன்! அப்படியே, தொடர்ந்து கிரியை செய்வாராக.... நான்* **சோதிக்கப்பட்ட பின்பு சுத்தப்பொன்னாய்** *விளங்குவேன்" என கெம்பீரித்தார்! (யோபு.23:8-10). தீதாய் துஷ்பிரயோகம் செய்த, எலிப்பாஸின் "பொய்யான தாழ்மையை" வென்று, ஜெயங்கொண்டார் யோபு!*

*– T. ரத்தினகுமார்*

# ஜார்ஜ் விஷாட்,

## தீயிலிடப்பட்ட, ஸ்காட்லாந்து இயேசு பக்தன்!



( AD 1513-1546 )

மரியாள் வணக்கத்திலிருந்து, சீர்திருத்தவாதியாய் ஸ்காட்லாந்து மக்களுக்கு விசுவாச வாழ்க்கையை கொண்டு வந்தவர். ஜார்ஜ் விஷாட், கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் சுமார் 5-ஆண்டுகள் தங்கியிருந்து 1543-ம் ஆண்டு ஸ்காட்லாந்து திரும்பினார். கத்தோலிக்க வாதத்தை எதிர்த்து "இயேசுவின் மீது கொண்ட விசுவாச வாழ்க்கையை" மிகுந்த வல்லமையோடு தீவிரமாய் பிரசங்கித்தார். அவருடைய மனதின் பாரமாயிருந்ததெல்லாம் இரட்சகர் இயேசுவின் விசுவாசமாகிய புதியஏற்பாட்டை ஸ்காட்லாந்து முழுவதும் அறிவிக்க வேண்டும் என்றே தீவிரம் கொண்டார். இவர் பிரசங்கிப்பது அனைத்தும் 'வேத புரட்டு' என அறிவித்து இவருக்கு எதிராய் 'பிரச்சின் பிஷப்' (1538) மக்களை தூண்டிவிட்டதால் அங்கிருந்து இங்கிலாந்து நாட்டிற்கு ஜார்ஜ் விஷாட் உயிர்தப்பி ஓடவேண்டியதாயிருந்தது. ஆகிலும் இங்கிலாந்து தேசத்தில் தீவிரமாய் இயேசுவின் விசுவாசத்தை அறிவித்தார். பின்பு ஆர்ச் பிஷப் தாமஸ் கிரம்மர், இவரை வழக்கு மன்றத்திற்கு இழுத்தார். பின்பு அங்கிருந்து ஜெர்மனிக்கும், பின்பு அங்கிருந்து சுவிட்சர்லாந்திற்கும் பின்பு 1542-ம் ஆண்டு, தான் கற்ற மறைஆராய்ச்சி கிறிஸ்டி கல்லூரியான கேம்பிரிட்ஜ் பட்டணத்திற்கு வந்து சேர்ந்தனர். இவ்வாறு "கிறிஸ்துவின் விசுவாச பிரசங்கத்திற்காக" விரட்டப்பட்டு எங்கெல்லாம் சென்றாரோ, அங்கெல்லாம் கிறிஸ்துவை பற்றும் விசுவாச அக்கினியை எரியச் செய்தார், மீண்டுமாய் 1544-ம் ஆண்டு ஸ்காட்லாந்திற்கே திரும்பி இயேசுவின் சுவிசேஷத்தை பல இடங்களில் சென்று போதித்தார். இத்தனை நிகழ்வுகளையும், பிற்காலத்தில் வல்லமையான பிரசங்கியாய் எழுந்த "ஜான் நாக்ஸ்" (John Knox) என்ற ஜார்ஜ் விஷாட்டுடன் நட்புகொண்டு பின்பற்றிய அவரது சிஷ்யன் வெளிப்படுத்தினார்.

1546-ம் வருடம் அவரை சிறைப்பிடித்த பியாட்டன் ஆலோசனை சங்கம், பேரளவிற்கு விசாரித்து விட்டு, ஒரு மரத்தூணில் அவரை தூக்கிலிட்டு, St.ஆண்ட்ரூஸ் என்ற ஸ்தலத்தில் 1546-ம் ஆண்டு மரக்கம்பத்தில் கட்டி எரித்து விட்டார்கள்!

எது உண்மையான சபை? என்பதை, அவர் சென்ற இடமெல்லாம் பிரசங்கித்தார்! "எங்கெல்லாம் தேவனுடைய வார்த்தை உண்மையாய் பிரசங்கிக்கப்படுகிறதோ" அதுவே உண்மையான சபை! என ஆணித்தரமாய் பிரசங்கித்து "கிறிஸ்துவின் இராப்போஜனத்தை - அவரது சரீரம்" என அறிவித்து, மரிப்பதற்குமுன் இரண்டு முறை தன் சிஷ்யர்களோடு அப்பம் பிட்டார்!

*- கிறிஸ்துவின் பலிபீட சாட்சிகள்*

## வாலிபனே, உன் ஓட்டத்தை நித்திய பேரின்பம் நோக்கி ஓடு!

பூர்வீக பரிசுத்த தேவ மனிதன் அம்புரோஸ் என்பவரின் மரண சமயம் அது! அவரைக்காண சில வாலிபர்கள் அவருடைய அறைக்குள் நுழைந்தனர். அந்த வாலிபர்கள் அனைவரும் பாவத்தில் ஜீவித்துக் கொண்டிருந்தவர்கள்! மரணக் கட்டிலையும், அதின் மேல் படுத்திருந்த பரிசுத்தவான் அம்புரோசின் தெய்வீக சாயலையும், அவருடைய முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த பரலோக திவ்விய சமாதானத்தின் அமைதியையும், பரலோகம் செல்ல துடித்துக் கொண்டிருந்த அவரது ஆனந்த ஆர்வத்தையும் கண்ட அந்த வாலிபர்களில் குறிப்பிட்ட ஒருவன் "நான் மரிப்பேனானால் இந்த அம்புரோஸ் பரிசுத்தவானைப் போலத்தான் மரிப்பேன்" என்று தன்னையே மறந்து அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டு அந்த அறையில் கூடியிருந்தோர் நெஞ்சமெல்லாம் ஆனந்தப் பரவசத்தால் சில்லெனக் குளிர்ந்து... அனைவரும் மனந்திரும்பினர்!

இரு சாராரான மாந்தர் மரணத்தைச் சந்திக்கிறார்கள். ஒரு சாரார் மரணத்தைக் கண்டு நடுநடுங்கி அதைக் கண்டு அலறி அடித்துக் கொண்டு பின் நோக்கி ஓட்டம் பிடிக்கையில், மற்றொரு சாரர் மரணத்தை மட்டற்ற மகிழ்ச்சியுடன் வரவேற்று அரவணைத்து அதன் வழியாக நித்திய பேரின்ப வீட்டிற்குக் கடந்து செல்லுகின்றனர். காரணம், முந்தினோர் ஆண்டவர் இயேசுவையும் அவருடைய விலையேறப்பெற்ற இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ளாத மக்கள். ஆனால் பிந்தினோர், இரட்சகர் இயேசு அருளிய மாட்சிமையான இரட்சிப்பைப் பெற்று அவருக்குள் பரிசுத்தமாக வாழ்ந்த மக்கள்! அவர்கள் தங்கள் இரட்சகரில் பெற்ற அந்த இரட்சிப்பே மரணத்தை அத்தனை தைரியத்தோடும் முக மலர்ச்சியோடும் சந்திக்க அவர்களுக்குப் பெலன் அளித்தது.

ஓ, வாலிபனே உன் வாழ்வின் ஓட்டம் கிறிஸ்துவுக்குள் ஆரம்பித்து கிறிஸ்துவுக்குள் முடிவதே உயர்ந்ததும் நித்தியமுமான இலட்சியமாகும்!

- சுவிசேஷ மலர்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by MADURAI CHRISTIAN FELLOWSHIP, a Regd Society.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi. Editor T.Rathnakumar, Madurai.